தினமலர்
தூத்துக்குடி
வெள்ளி டிசம்பர் 9 2016

# கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்ய வ.உ.சி கல்லூரி, ஸ்டெர்லைட் இணைந்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம்

★ ஜனவரி முதல் டிப்ளமோ சர்டிபிக்கேட் கோர்ஸ், பிற கல்லூரி மாணவர்களும் சேர அழைப்பு

★ மும்பை ஐ.ஐ.டியுடன் இணைந்து நோடல் ரிசர்ச் மையமும் வரும் 15ல் துவக்கம்

தூத்துக்குடி, டிச. 9–

தென் தமிழகத்தில் முதல் முறையாக தூத்துக்குடி வ.உ.சி கல்லூரியில் மாணவ, மாணவிகளின் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் வகையில் ஸ்டெர்லைட் நிறுவனத்துடன் இணைந்து வேலைவாய்ப்பு டிப்ளமோ சர்டிபிக்கேட் கோர்ஸ் துவக்குகிறது. இதில் இந்த பகுதியில் உள்ள மற்ற் கல்லூரிகளில் உள்ள மாணவ, மாணவிளும் பங்கேற்கலாம். இதில் சிறப்பான பயிற்சி பெற்று தேர்வானால் வேதாந்த குழுமத்தில் வேலை உறுதி உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

இது குறித்து தூத்துக்குடி வ.உசி கல்லூரி முதல்வர் வீரபாகு கூறியதாவது;

தூத்துக்குடி வ.உ.சி கல்லூரியும் ஸ்டெர்லைட் காப்பர் நிறுவனமும் இணைந்து இண்டஸ்டிரி அயின்ட் இன்ஸ்டிடியூசன் பார்ட்னர்ஷிப் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று போட்டுள்ளது. 2016 அக்டோபர் முதல் 2019 செப்டம்பர் மாதம் வரை இந்த ஒப்பந்தம் (எம்.ஓ.யூ) போடப்பட்டுள்ளது.

இதன் முக்கிய நோக்கம் கல்லூரி மாணவ, மாணவிகளின் வேலைவாய்ப்பு பெறுவதற்கு தான். அனைத்து மாணவ, மாணவிகளும் குறிப்பாக இளங்கலை இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மாணவ, மாணவிகள், முதுகலை படிக்கும் மாணவ, மாணவிகளுக்காக டிப்ளமோ சர்டிபிக்கேட் பாட படிப்பு துவக்கப்படுகிறது.

தொழிற்சாலைகளுக்கு தேவையான படிப்பினை வ.உ.சி கல்லூரி பேராசிரியர்கள் உதவியுடன் மாணவ, மாணவிகளுக்கு சர்டிபிக்கேட் ஆப் டிப்ளமோ கோர்ஸ் மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது. இதில் தேர்வாகும் மாணவ, மாணவிகளுக்கு ஸ்டெர்லைட் தொழிற்சாலை மற்றும் வேதாந்த குழுமத்தின் எங்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும். இதற்கு ஒப்பந்தத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு எப்போதெல்லாம் வேலைவாய்ப்பு முகாமினை நடத்துகிறார்களோ அப்போதெல்லாம் இந்த கோர்ஸ் படித்து தேர்வானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட உள்ளது. இந்த வேலைவாய்ப்பு கோர்சில் தூத்துக்குடி வ.உ.சி கல்லூரி மாணவ,மாணவிகள் மட்டுமின்றி பிற கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளும் சேர்ந்து படிக்கலாம். மதுரை வரை உள்ள கல்லூரி மாணவ, மாணவிகள் சேர்ந்து படிக்கலாம்.

கல்லூரி வேலை நேரம் முடிந்த பிறகு வாரத்தில் 3 நாட்கள் இதற்கான பயிற்சி அளிக்கப்பட உள்ளது. வேதியியல், இயற்பியல் மற்றும் வணிகவியல் பாடத்தில் படித்து வருவோருக்கு இந்த கோர்ஸ் மிகுந்த பயனாக இருக்கும். தொழிற்சாலை நிபுணர்கள், வ.உ.சி கல்லூரி பேராசிரியர்கள் இணைந்து இந்த கோர்சிற்கான பாடத்திட்டத்தை உருவாக்க உள்ளனர்.

வரும் ஜனவரி 2017 முதல் இவை ஆரம்பிக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செயல்படுத்தப்பட உள்ளது. வ.உ.சி கல்லூரி பேராசிரியர்கள், தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட அனைத்து வல்லுனர்கள் வரவழைக்கப்பட்டு மாணவ, மாணவிகளுக்கு அனைத்துவித தொழிற்சாலை சம்பந்தமான அனைத்து அம்சங்களும் டிப்ளமோ கோர்ஸ் மூலம் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

பாடத்திட்டத்தோடு சேர்ந்து மாணவ, மாணவிகள் நேரடியாகவும் தொழிற்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டு செயல்முறை விளக்கங்களும் (கேன்சான் டிரைனிங்) அளிக்கப்படுகிறது. இதில் ஆங்கில புலமையை கொடுக்க கூடிய ஸ்பாட்ஸ் ஸ்கில், டெக்னிக்கல் ஸ்கில், இண்டஸ்டிரியல் டிரைனிங், சேப்டி அயின்ட் செக்கியூரிட்டி ஆகிய நான்கு விதமான பாடங்கள் மாணவ, மாணவிகளுக்கு அளிக்கப்படுகிறது. ஒன்றரை மணி நேரம் மதியம் 2 மணி முதல் 3.30 மணி வரை இந்த பயிற்சி நடக்கும். அறிவியல் மற்றும் கலைக் கல்லூரிரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தென் மாவட்டத்தில் முதல், முதலாக இந்த டிப்ளமோ பயிற்சி தூத்துக்குடி வ.உ.சி கல்லூரியில் தான் துவக்கப்படுகிறது.

3 ஆண்டுகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை சிறந்த தேர்வாளர்களாக தயார் செய்து விடுவோம் என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. கோர்சில் தேர்வு செய்யப்படுவோருக்கு தொழிற்சாலையோடு சேர்ந்த சான்று வழங்கப்படுகிறது. இதில் சக்சஸ் பண்ணினால் வேலை உறுதியாக கிடைக்கும். வேதியியல் துறை பேராசிரியர் பீட்டர் அமல்தாஸ், வணிகவியல் துறை பேராசிரியர் மரிய நேவிஸ் சோரீஸ், இயற்பியல் துறை பேராசிரியர் ஜான் பிரின்ஸ் சௌந்திரநாயகம் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். மாணவ, மாணவிகளின் வேலைவாய்ப்பிற்காக அவர்களின் திறனை மேம்படுத்த இதுபோன்ற பயிற்சியை அளிக்கிறது. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறையின் கீழ் மும்பையில் செயல்பட்டு வரும் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் வ.உ.சி கல்லூரி பங்குதாரராக இணைந்து ஸ்போக்கன் டியூட்டோரியல் நோடல் ரிசர்ச் மையத்தை வ.உ.சி கல்லூரியில் துவக்குகிறது.

பல்கலைக்கழகங்களுக்கு மட்டுமே இதுபோன்ற மையங்கள் வழங்கப்பட்டு வந்த நிலையில் தென் தமிழகத்தில் முதல் முறையாக வ.உ.சி கல்லூரியில் இந்த மையம் துவக்கப்படுகிறது. இன்றைக்கு எல்லாமே கம்ப்யூட்டர் மயமாகி விட்ட நிலையில் வேலைவாய்ப்பை மாணவ, மாணவிகள் பெறும் வகையில் கணினி வழிக்கல்வி இதன் மூலம் கற்றுக்கொடுக்கப்படுகிறது. வேலைவாய்ப்பு மட்டுமின்றி மாணவ, மாணவிகள் நாலேஜ் இம்ரூவ் பண்ணும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கம்ப்யூட்டரில் லினக்ஸ் சாப்ட்வேர், சி.பிளஸ்,பிளஸ், பிளஸ், ஜாவா, பிளண்டர், விப்ரே ஆபிஸ், சிலாப், பி,கெம்பைன்ட் உள்ளிட்ட பல கற்றுக்கொடுக்கப்படுகிறது. இதற்கான பயிற்சி வரும் 15ம் தேதி துவங்குகிறது.

இவ்வாறு முதல்வர் வீரபாகு தெரிவித்தார்.



